விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 102 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 17 சனிக்கிழமை (30.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஜனாதிபதி வேட்பாளர் யார்?
# பெரமுனவுக்குள் பிளவு
## ஒரு தரப்பினர் ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)


**ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என ஒரு தரப்பினரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என மற்றைய தரப்பினரும் உறுதியாக நிற்பதன் காரணமாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பிளவுபடும் நிலை உருவாகியுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.**

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ குடும்பத்திற்கு ஆதரவான தரப்பினர் கட்சி தனது சொந்த வேட்பாளரை நிறுத்தி தேர்தலில் போட்டியிட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

எனினும் தேர்தல் திகதி அறிவிக்கப்படாததால் இது குறித்து கட்சி இன்னமும் தீவிரமாக ஆராயவில்லை.

இதேவேளை அரசாங்கத்தில் அமைச்சரவை பதவிகளை வகிக்கும் பொதுஜன பெரமுனவின் பாராளு 02



### இளவாலையில்
## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் குடும்பத்தை விட்டு பிரிந்த நிலையில் தனியாக வசித்து வந்த குடும்பஸ்தர் நேற்று இளவாலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 15

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 181,872 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை 15

### ஏப்ரல் முதல் வாரத்தில்
## சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணி அங்குரார்ப்பணம்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசியல் கூட்டணி எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளது.

ஏற்கெனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிக் கட்சியாக உள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் சஜித் பிரேமதாஸ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார்.

அதேபோன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் 15

### யாழ்.போதனா வைத்தியசாலையின்
## வெளிநோயாளர் பிரிவு 6 மணி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவு மாலை ஆறு மணி வரை செயற்படும் என யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தீர்மானங்களை 15

## வடக்கு மாகாண மக்களை இனி ஏமாற்ற முடியாது
### சந்திம வீரக்கொடி எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தென் மாகாண மக்களை போன்று வடக்கு மாகாண மக்களை இனிவரும் காலங்களில் ஏமாற்ற முடியாது” என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே 15

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையில் பொதுஜன பெரமுனவின் மாநாடு இன்று
### தேர்தல் தொடர்பில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பொது மாநாடு இன்று தங்காலை நகரில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக பொதுஜன பெரமுனவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு குறித்த மாநாடு இடம் 02

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்
## புதிய அரசியல் கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பம் - சம்பிக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகவுள்ளேன். இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வுகளை வழங்கி நாட்டை கட்டியெழுப்பக் கூடிய அரசியல் கூட்டணியை உருவாக்க தலையிடுவேன் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

“பெப்ரவரி 14ஆம் 02

### சர்வதேச நாடுகளுடன்
## இணைந்து செயற்படுபவரே ஜனாதிபதியாக வேண்டும்
### நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

நாடு தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கக்கூடிய சிறந்த அரசியல் அனுபவம் கொண்ட சர்வதேச நாடுகளுடன் இணைந்து 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எந்த தேர்தல் நடைபெற வேண்டும் நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்

## பொதுஜன பெரமுனவிடம் பசில்



(கொழும்பு)
எந்த தேர்தல் முதலில் நடைபெற வேண்டும் என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள் என முன்னாள் நிதியமைச்சர் பசில்ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் நிறைவேற்றுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலிற்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்துங்கள் என ஏன்னுடைய தனிப்பட்ட கருத்தினையே நான் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன் என பசில்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சி இது குறித்து கலந்தாராய்ந்து தீர்மானத்தை எடுக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையில் பசில் ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலே முதலில் இடம்பெறவேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து என பசில் ராஜபக்ஷ தெரிவித்தார் என கட்சியின் பொதுச்செயலாளர் சாகலகாரியவசம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து அவர் அது தனது தனிப்பட்ட கருத்து கட்சியின் கருத்து என்பதை ஜனாதிபதியிடமும் தெரிவித்துள்ளார் என குறிப்பிட்டுள்ள சாகலகாரியவசம் கட்சி இது குறித்து மேலும் ஆராய்ந்து தீர்மானிக்கலாம் எனவும் பசில்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார் (ம-7,10)

### காதல் விவகாரம்

# 31 வயது இளைஞன் வெட்டிக் கொலை

(கொழும்பு)
காதல் விவகாரத்தால் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் லுணுகம்வெஹர, பஞ்சி அப்புஜந்துர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

31 வயதுடைய நபரே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் லுணுகம்வெஹர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10)

# சிறையில் அடைக்கப்பட்ட ஞானசார தேரருக்கு சுகவீனம்

சிறையில் அடைக்கப்பட்டுள்ள கலகொடஅத்தே ஞானசார தேரர் சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஞானசார தேரரை பார்வையிட வந்த ராவணா பலய அமைப்பின் செயலாளர் நாயகம் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் இதற்கு முன்னரும் நோய் நிலைமையால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் அதற்கான சிகிச்சைக்காகவே சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் சத்தாதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தியமைக்காக ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-7,10)

## புதிய...

திகதி "நாட்டுக்காக ஒன்றிணையும் செயல்பாடு" திட்டத்தை நாம் முன்னெடுத்தோம். புதிய அரசியல் கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கூட்டணியின் நோக்கம் தேர்தலில் வெற்றி பெறுவது மாத்திரம் அல்ல. இது நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தை மையமாக கொண்டே உருவாக்கப்படும்.

உருவாக்கப்படும் கூட்டணியில் தேர்தல்களில் யார் நிற்க வேண்டிய பிரதிநிதிகள் என நியமிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயார்.

கூட்டணியின் சார்பில் வேறு ஒருவரை முன்னிறுத்தினாலும் அவரின் வெற்றிக்காக பாடுபடுவோம் எனவும் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்டுவரும் கூட்டணி தொடர்பான அறிவிப்புகள் வெளியாக உள்ளன.

இந்தக் கூட்டணியில் சம்பிக்க இடம்பெறுவாரா இல்லையா என்பது தொடர்பில் இதுவரை எவ்வித அறிவிப்புகளையும் அவர் வெளியிடவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7,10)

## பெரமுன...

மன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அவருக்கே ஆதரவளிக்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

இவ்வாறன நிலையில் பொதுஜன பெரமுனவுக்குள் பிளவு நிலை உருவாகியுள்ளது. (ம-7,10)


கல்யாணமாலை
(இலவச திருமண சேவை)



முக்கிய அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு
இலக்கம் 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிய கல்யாணமாலை அலுவலகம் 04.04.2024 வியாழக்கிழமை முதல் (தற்காலிகமாக) இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பழைய வலம்புரி அலுவலகம்) எனும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.
இடமாற்றத்தை முன்னிட்டு 03.04.2024 புதன்கிழமை கல்யாணமாலை அலுவலகத்துக்கு விடுமுறை என்பதை அறியத் தருகின்றோம்.
- நிர்வாகம்

மேலதிக தொடர்புகளுக்கு :
021 720 1005
076 097 3120


# உலகம் சுற்றுவதற்கு எனக்கு நேரமில்லை

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
உலகம் சுற்றுவதற்கு தமக்கு நேரமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதிலும் சுற்றுப் பயணங்களை மேற்கொள்வதனை விடவும், இளைய தலைமுறையினருக்கு சேவையாற்றும் பொறுப்பு தமக்கு உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிலர் தம்மிடம் அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கனடாவிற்கு செல்லவில்லையா என கேள்வி எழுப்புவதாகவும் அவ்வாறு நாடுகளில் சுற்றித் திரிவதற்கு தமக்கு நேரமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சிறுவர், சிறுமியருக்கு காணப்படும் குறைபாடுகளை கண்டறிந்து அதற்கு தீர்வு வழங்குவதே தமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7,10)


பணிப்பெண் தேவை
யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை.
(301)
077 327 6502


## முன்னாள்...

பெறவுள்ள அதேவேளை பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு வந்ததன் பின்னர் நடைபெறவுள்ள முதலாவது மாநாடு இதுவாகும்.

அதேவேளை இன்று இடம்பெறவுள்ள குறித்த மாநாட்டில் பசில் ராஜபக்ஷ கலந்து கொள்வாரா என்பது தொடர்பில் இதுவரை எவ்வித அறிவித்தல்களும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


காணி விற்பனைக்கு
- பலாலி வீதியில் காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு.
- பலாலி வீதி Bus depot இற்கும் உரும்பிராய்ச் சந்திக்குமிடையில் காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு.
- காணி ஒன்று (40 X 165) 2 பரப்பு ஆறு குழி
- (50 X 165) 3 பரப்பு 7 குழி கடை, வீடு கட்டலாம்.
- இன்னும் பல காணிகள் உண்டு.
(299)
077 603 3259(MGR)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநுரகுமாரவை விவாதத்திற்கு அழைக்கும் ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

நாட்டுக்காக முன்வைக்கப்பட்ட பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் விவாதத்திற்கு வருமாறு தேசிய மக்கள் கட்சியின் தலைவர்களுக்கு சவால் விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பொருளாதார நிபுணர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோர் விவாதத்திற்கு முன்வைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏழாவது தடவையாக இந்த சவாலை முன்வைப்பதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், தேசிய மக்கள் சக்தி தனது சவாலை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தம்மை விவாதத்திற்கு அழைத்த போது, அநுர குமார திசாநாயக்க மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பரிவாரங்கள் மறைந்திருந்ததாகவும்,

அப்படியானால், இவ்வாறானதொரு பகிரங்கச் சபைக்கு முகம் கொடுக்க முடியாது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்ததாலேயே இவ்வாறு செயற்படுவதாகவும் நளின் பண்டார தெரிவித்திருந்தார். (நி-5-6)

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறும்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

**(கொழும்பு) [redacted]**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நிச்சயமாக நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம். ஏ.எஸ்.ரத்நாயக்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டியுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் எவ்விதத் தாக்கமும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்த வேண்டும் எனவும் ஆணைக்குழு கோரிய10 பில்லியன் ரூபாய் நிதி அமைச்சிடம் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளதால் உரிய காலக்கெடுவிற்குள் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



மேலும் ஜனாதிபதித்தேர் தல் செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்குள் நடை பெறும் எனவும், ஜூலை அல்லது ஒகஸ்ட் மாதத்தில் இது குறித்த அறிவிப்பை வெளியிடுவோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-5-6)

# பொருளாதார நிலைமையால் ரஷ்ய படையில் இணையும் இலங்கையர்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடினமான பொருளாதார நிலைமை காரணமாக ரஷ்ய குடியுரிமை பெறும் நம்பிக்கையில் நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ளதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர் ஒருவர் மாதம் 3000 அமெரிக்க டொலர் (சுமார் 9 இலட்சம் இலங்கை ரூபா) சம்பளமாக பெறுவதாக இலங்கையர்கள் தெரிவித்ததாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

# பொருளாதார வளர்ச்சிப்போக்கு எதிர்வரும் காலங்களிலும் தொடரும்

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி எதிர்வரும் காலங்களில் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள மார்ச் மாத நாணயக் கொள்கை விளக்க அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு முதல் இரண்டு காலாண்டுகளில் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்த போதிலும்,

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 1.6 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதமாக கணிசமாக அதிகரித்துள்ளது.

இந்தப் பொருளாதார வளர்ச்சிப் போக்கு எதிர்வரும் காலாண்டுகளிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5-6)

# இலங்கையில் அதிகரித்த எச்.ஐ.வி தொற்றாளர்கள்

(கொழும்பு)

எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கையின் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பணிப்பாளர் டொக்டர் ஜானகி விதானபத்திரன இதனை தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# மின்சார கார்களின் பாவனையை ஊக்குவிக்க வேண்டும்-சம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கார்களின் பாவனையை ஊக்குவிக்க வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ளன.

நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி பிரச்சினை தான் இதற்கு காரணம். எரிபொருள் விலையும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ் நிலையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்பக்கம் திரும்புவது முக்கியம்.

அதன்படி மக்கள் தங்கள் சொந்த பயன்பாட்டுக்கு மின்சார கார்களை பயன்படுத்த அறிவுறுத்தப்பட வேண்டும்.

பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கு மின்சார வாகனங்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த கட்டத்தில், சூரிய சக்தியைப் பயன்படுத்தி கார் சார்ஜிங் நிலையங்கள் நிறுவப்பட வேண்டும். சூரிய சக்தியின் பயன்பாட்டை தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளுக்கு விரிவுபடுத்துவது உடனடித் தேவை என்றும் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# நாளை மறுதினம் கூடவுள்ள பாராளுமன்றம்

(கொழும்பு)

ஏப்ரல் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் பாராளுமன்றம் கூடவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஆயுர்வேத சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் தொடர்பாக ஏப்ரல் முதலாம் திகதி விவாதம் இடம்பெறவுள்ளதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பரேட் திருத்தச்சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேலும் அன்றைய தினம் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழ் உள்ள விதி முறைகள் மீதான விவாதமும் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெங்களூருவை வென்றது கொல்கத்தா

## ஹோலியின் விளாசல் வீணானது

ஐ.பி.எல்., லீக் போட்டியில் அசத்திய கொல்கத்தா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பெங்களூரு வீரர் விராட் ஹோலியின் விளாசல் வீணானது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. பெங்களூருவில் நடந்த லீக் போட்டியில் பெங்களூரு, கொல்கத்தா அணிகள் மோதின.

**ஹோலி அபாரம்**

பெங்களூரு அணிக்கு அணித் தலைவர் டுபிளசி (8) ஏமாற்றினார். மறுமுனையில் அசத்திய விராட் ஹோலி, ஸ்டார்க் வீசிய 3வது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடிக்க 17 ஓட்டங்கள் கிடைத்தது. ஸ்ரார்க், ஹர்ஷித் பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்த கிறீன், சுனில் நரைன் வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். இரண்டாவது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் சேர்த்த போது ரசல் "வேகத்தில்" கிறீன் (33) போல்டானார்.

வருண் சக்கரவர்த்தி பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய ஹோலி, 36 பந்தில் அரைசதம் எட்டினார். மக்ஸ்வெல் (28) ஓரளவு கைகொடுத்தார். ரஜத் படிதர் (3), அனுஜ் ரவாத் (3) சோபிக்கவில்லை. அடுத்து வந்த தினேஷ் கார்த்திக், ரசல் வீசிய 19ஆவது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்டார். கார்த்திக் (20) "ரன்-அவுட்" ஆனார். பெங்களூரு அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 182 ஓட்டங்களை எடுத்தது. ஹோலி (83) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**சூப்பர் ஆரம்பம்**

சவாலான இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு பில் சால்ட், சுனில் நரைன் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. கொல்கத்தா அணி 21 பந்தில் 50 ஓட்டங்களை எட்டியது. முதல் விக்கெட்டுக்காக 86 ஓட்டங்கள் சேர்த்தபோது மயங்க் தாகர் பந்தில் நரைன் (47) போல்டானார். சால்ட் (30) நம்பிக்கை தந்தார். அல்ஜாரி ஜோசப் வீசிய 11வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்த வெங்கடேஷ் ஐயர், 29 பந்தில் அரைச்சதம் எட்டினார். யாஷ் தயாள் பந்தில் வெங்கடேஷ் (50) ஆட்டமிழந்தார்

பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் ஸ்ரேயாஸ், மயங்க் தாகர் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

கொல்கத்தா அணி 16.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

ஸ்ரேயாஸ் (39), ரிங்கு சிங் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணியின் சுனில் நரேன் தெரிவானார். (ம-7,10)



**1500 சிக்சர்**

சுனில் நரைன் பந்தை (7.5 ஓவர்) ஹோலி சிக்ஸருக்கு அனுப்பினார். இது, ஐபி.எல், வரலாற்றில்பெங்களூரு சார்பில் பதிவான 1500வது சிக்ஸரானது. மும்பை சார்பில் அதிகபட்சமாக 1575 சிக்சர் அடிக்கப்பட்டுள்ளது.

**240 சிக்ஸர்**

ஐ.பி.எல்., அரங்கில் பெங்களூருவுக்காக அதிக சிக்சர் அடித்த வீரர்கள் வரிசையில் ஹெய்லை (239) முந்தி முதலிடம் பிடித்தார் ஹோலி (241 சிக்சர்).

✸ ஐ.பி.எல்., தொடரில் அதிக சிக்ஸர் அடித்த வர்கள் பட்டியலில் தோனியை (239) முந்தி 4வது இடம் பிடித்தார் கோலி.




## எப்போது வருவார் சூரியகுமார்

இந்திய அணி வீரர் சூர்யகுமார் (வயது-33). சர்வதேச "ரி-20" இல் 60 போட்டிகளில் பங்கேற்ற இவர் 2 ஆயிரத்து141 ஓட்டங்களை எடுத்துள்ளார். உலகின் "நம்பர்-1" துடுப்பாட்ட வீரராக திகழ்கிறார்.

கடந்த ஆண்டு தென்னாபிரிக்க மண்ணில் நடந்த "ரி-20" போட்டியில் அணித் தலைவராகக் களமிறங்கிய இவரது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. அடுத்து "ஸ்போர்ட்ஸ் ஹெர்னியாவுக்கு" சத்திரசிகிச்சை செய்தார்.

தற்போது பெங்களூரு தேசிய கிரிக்கெட் அக்கடமியில், காயத்தில் இருந்து மீண்டுவரத் தேவையான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.



இதனால் ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணிக்காக களமிறங்க முடியாமல் உள்ளார். தவிர வரும் ஜூன் 2-29இல் அமெரிக்கா, மே.தீவுகளில் "ரி20" உலகக்கிண்ணத் தொடர் நடக்கவுள்ளது.

இதனால் சூர்யகுமாரை அவசரப்பட்டு ஐ.பி.எல்., தொடரில் களமிறக்க வேண்டாம் என இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., தரப்பில் வெளியான செய்தியில்,

"சூர்யகுமார் சிறப்பான முறையில் தேறி வருகிறார். விரைவில் மும்பை அணிக்கு திரும்புவார். எனினும் அடுத்த சில போட்டிகளில் இவர் பங்கேற்க மாட்டார். "ரி20" உலகக் கிண்ணத் தொடர் வரவுள்ளதால் இவர் விடயத்தில் அவசரப்பட வில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## எங்கே செல்லும் பாண்ட்யா பாதை...

### தலைமைப் பதவியில் பரிதவிப்பு



மும்பை அணியின் தலைமைப் பதவியில் தடுமாறுகிறார் ஹர்திக் பாண்ட்யா. இரண்டு போட்டிகளில், இரண்டு தோல்வியை சந்தித்துள்ளார். இவரது துடுப்பாட்டமும் எடுபடாததால், இக்கட்டான நிலையில் உள்ளார்.

ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணிக்கு ஐந்து முறை கிண்ணம் வென்று கொடுத்தவர் ரோகித் சர்மா. இவருக்கு 36 வயதாகி விட்டது என கூறி தலைமைப் பதவியைப் பறித்தனர்.

குஜராத் அணிக்கு கிண்ணம்வென்று கொடுத்த, ஹர்திக் பாண்ட்யாவை (வயது-30), மும்பை அணியின் புதிய தலைவராக நியமித்து அழகுபார்த்தனர். சக மும்பை வீரர்கள் சூர்யகுமார், பும்ரா உள்ளிட்டோர், பாண்ட்யாவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கவில்லை. இதனால் அணியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இதனிடையே முதல் இரு போட்டியிலும் மும்பை அணி தோற்றது. இதற்கு அணித் தலைவர் பாண்ட்யாவின் வியூகங்கள் எடுபடாததே முக்கிய காரணம்.

இந்தியாவின் "நம்பர்-1" வேகப் பந்துவீச்சாளர் பும்ராவை, அடுத்தடுத்த போட்டியில் மூன்றாவதாக பந்துவீச அழைத்து தவறு செய்தார். இதன் காரணமாக ஹைதராபாத் துடுப்பாட்ட வீரர்கள் மும்பை பந்துவீச்சை சிதறடித்து "மெகா" ஸ்கோரை எட்டி சாதனை படைத்தனர்.

மும்பை அணி சில தோல்வியுடன் தான் எப்போதும் தொடரை தொடங்கும். இரு போட்டிகள்தான் முடிந்துள்ளன. இதனால் பாண்ட்யாவின் தலைமைப்பதவிக்கு ஆபத்து இல்லை. தவறுகளை சரி செய்து, அணியை வெற்றிப்பாதைக்கு திருப்ப வேண்டும்.

ஹைதராபாத் அணிக்கு எதிரான தோல்விக்குப் பின், சக மும்பை வீரர்களிடம் பாண்ட்யா பேசியதாவது,


ஹைதராபாத் (277/3) அணிக்கு எதிராக இமாலய இலக்கை துரத்திய போது, நாம் 246/5 ஓட்டங்கள் எடுத்தோம். வேறு எந்த அணியும் இவ்வளவு போராடி இருக்குமா எனத் தெரியவில்லை? துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு அணியாக சிறப்பாகவே செயற்பட்டோம்.

அதேபோல நமது பந்துவீச்சாளர்களை நினைத்து பெருமைப்படுகிறேன். அன்றைய நாள் கடினமாக இருந்தது. பந்துவீச்சாளர்களுக்கு போதிய அனுபவம் இல்லை. நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து, ஒன்றிணைந்து சவால்களை சமாளிப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

**சச்சின் நம்பிக்கை**

மும்பை வீரர்கள் "டிரசிங் ரூமில்" ஜாம்பவான் சச்சின் கூறுகையில், ஹைதராபாத்துக்கு 277 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தோம். முதல் 10 ஓவரில் நமது வீரர்கள் விளாசியதால், யார் வெற்றி பெறுவர் என உறுதியாகத் தெரியவில்லை. நமது வீரர்கள், இலக்கை எட்டும் நிலை இருந்தது. மும்பை அணி துடுப்பாட்டம் வலுவாக உள்ளதை காட்டியது. கடினமான சூழலை மறந்து விடுவோம், என்றார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியவெள்ளி தினமான நேற்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமான திருச்சிலுவை பவனியானது கரவெட்டி தேவமாதா ஆலயத்தில் நிறைவடைந்தது.

# போர்ட் சிட்டி நெடுஞ்சாலை வீதி ஜூலை மாதம் திறக்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு இங்குருகடே சந்தியில் இருந்து துறைமுக நகரம் வரையிலான உயர்மட்ட துறைமுக அணுகல் வீதி ஜீலை மாதம் திறந்து வைக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

5.3 கிலோமீற்றர் நீளமுள்ள இந்தச்சாலை நான்கு வழிச்சாலையைக் கொண்டுள்ளது. மேலும் அதன் கட்டுமானப் பணிகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

புதிய அதிவேக நெடுஞ்சாலை இங்குருகடே வளைவு பெட்டா ஹப் வளைவு, அலுத் மாவத்தை, காலிமுகம் மற்றும் போர்ட்சிட்டி வளாகம் ஆகிய ஐந்து நுழைவாயில்களைக் கொண்டுள்ளது.

துறைமுகத்தில் இருந்து கொள்கலன்களை தடையின்றி கொண்டு செல்வதற்கான புதிய அணுகல் பாதையாகவும் அதிவேக நெடுஞ்சாலை பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட ரூ.28 பில்லியனுக்கும் அதிகமான நிதி உதவி திட்டத்திற்காக செலவிடப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# பயண ஆலோசனைகளை மாற்றுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை

## பிரித்தானியா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கானபயணஆலோசனைகளை புதுப்பிப்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

அதேநேரம், தற்போது நடைமுறையில் உள்ள இலங்கைக்கான பயண ஆலோசனைகளை உன்னிப்பாக அவதானிப்பதாகவும், தொடர்ந்து பரிசீலிப்பதாகவும் பிரித்தானிய பொதுநலவாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அஹ்மத் விம்ளின்டன் பிரபு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை பாரிய பங்காற்றுவதாக நேஸ்பி பிரபு பிரித்தானிய பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை பிரித்தானியா புதுப்பிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் மற்றும் இலங்கையிலுள்ள சில உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப் பெறும் தகவல்களை பரிசீலித்த தன் பின்னர் பயண ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

# அறிமுகப்படுத்தப்படவுள்ள புதியவரி-நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

உள்ளூர் உற்பத்தியாளரைப் பாதுகாக்கவும் நுகர்வோரைப் பாதுகாக்கவும் புதிய வரி அறிமுகப்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டம் ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2025ஆம்ஆண்டு ஜனவரி முதல் விசேட வர்த்தக வரியை நீக்குவதற்கான யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த முடிவை எடுத்ததற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகளை எளிமையாக்கியதும் ஒரு காரணமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (5-6)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் பெரும்பான்மையான வெற்றி பெறுவார்



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சுயாதீனவேட்பாளராக களமிறங்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மையுடன் வெற்றியீட்டுவார் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக தேர்தலில் களமறிங்கவில்லை. அவர் எந்தவொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தாமலேயே இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அனைத்து கட்சிகள் இனங்கள் மதங்களை சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து செயற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி சுயாதீனவேட்பாளராகவே ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கி வெற்றிபெறுவார். அது மாத்திரமல்ல ஜனாதிபதி தேர்தலில் அதிகூடிய வாக்குகளுடனேயே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று தேசியத்தலைவராக மீண்டும் ஆட்சியமைப்பார்" என அமைச்சர் தெரிவித்துள்ளார். (5-6)

# இராசிபலன்

30.03.2024
பங்குனி 17, சனிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 6.19 மணிவரை

அனுசம் முன்னிரவு 7.18 மணிவரை
சுபநேரம் -3.12-4.42 மணிவரை
இராகுகாலம்-9.12-10.42 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** — வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**கடகம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** — பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** — திடீர் பண வரவால் மகிழ்ச்சியடைவீர்கள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், காரிய அனுகூலமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** — கடன் தொல்லைகள் குறையும், உறவினர் சந்திப்பில் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** — தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** — ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** — வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கனவுப் பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செல்வநிலை உயரும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**தனுசு** — பயணங்களால் பிரியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும்.

**மீனம்** — எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும்.

நல்ல யோசனையைக் கேட்காதவர்கள் துன்பம் அடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறை மாவட்டத்திற்கு வருகை தரவுள்ள மருதமடு அன்னை

(யாழ்ப்பாணம்)

மருதமடு அன்னையின் திருச்சுரூபம் மன்னாரிலிருந்து வெள்ளாம்குளம் ஊடாக யாழ். பேராலயத்திற்கு எதிர்வரும் 6.04. 2024 அன்று காலையில் எடுத்து வரப்படவுள்ளது.

யாழ். மறைமாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்டங்களின் பங்குகளுக்கும் எதிர்வரும் 6.04.2024 முதல் 30.04.2024 வரை திருச்சுரூபம் எடுத்து வரப்படவுள்ளது.

மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் 100 ஆவது ஆண்டு யூபிலி விழாவிற்கு ஆயத்தமாக மருதமடு அன்னையின் திருச்சுரூபமானது மன்னார் மறைமாவட்டப் பங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படும் நிலையில் யாழ். ஆயரின் வேண்டுகோளுக்கு அமைவாக திருச்சுரூபமானது யாழ்.மறை மாவட்டத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது.

இப் புனித நிகழ்வு மருதமடு திருத்தலத்திற்குச் சென்று வர முடியாத அன்னையின் பக்தர்களுக்குப் பெரும் ஆசீர்வாதம் ஆகும் எனவும் மருதமடு அன்னையின் வருகையைத் தகுந்த ஆயத்தத்துடன் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (நி-5-6-33)



யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள, யாழ் போதனா மருத்துவமனைக்கான எரியூட்டியினை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வெள்ளிக்கிழமை நாடாவை வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார். (படம்- சிவசாந்தன்)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யா/யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான தடகளப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் தலைவர் ரி.வரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (5-6)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வனிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுச் சங்கத்தின் 15 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக புதிய மகாநாட்டு மண்டபத்தில் தலைவர் முத்துச்சாமி விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

## தந்தை செல்வாவின் 126 ஆவது ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் தந்தை செல்வாவின் 126 ஆவது ஜெயந்தி விழா இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அறக்காவலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தொடக்க உரையினை செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் மற்றுமொரு அறங்காவலரான இ.பேரின்பநாயகம் நிகழ்த்தவுள்ள தோடு கம்பவாரிதி இ.ஜெயராஜின் தலைமையிலான சொற்சமர் சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.(5-6)




# திரும்பிச் செல்லவுள்ள நிதி ஆவன செய்யுமாறு கோரிக்கை

(கரணவாய்)

நாகர்கோவிலையும் எழுது மட்டுவாளையும் இணைக்கும் வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பி செல்லும் அபாயம் உள்ளதால் குறித்த நிதியை அவ் வீதிக்கு பயன்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தினரினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலையும் எழுதுமட்டுவாளையும் இணைக்கும் வீதியானது 1950 ஆம் ஆண்டளவில் மீன்பிடித் திணைக்களத்தின் ஊடாக அமைக்கப்பட்டது. இந் நிலையில் அந்த வீதி பல வருடங்களாக செப்பனிடப்படாமல் காணப்படுவதனால் அதனை செப்பனிடுவதற்கான நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் மேற்படி வீதிக்கு குறுக்காக நீரேரி காணப்படுவதனால் பாலம் அமைத்து வீதி அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதனால் பாலம் அமைக்க முடியாத நிலை காணப்பட்டு நிதி திரும்பிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளதால். இந்த நிதியை திரும்பிச் செல்லவிடாது தடுத்து இந்த வீதிக்கு அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-60)




யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எம்.சி.பி விக்ரமசிங்கவை பாதுகாப்புப் படைத்தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். (படம்- சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 130 | 130 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 220 | 150-180 | 200 |
| தக்காளி | 50 | 50 | 130 | 60-80 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 100 | 120-140 | 200 |
| கோவா | 250 | 200 | 280 | 250 | 250 |
| கரட் | 300 | 450 | 350 | 270 | 350 |
| பூசணி | 180 | 150 | 330 | 100 | 200 |
| புடோல் | 160 | 150 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 180 | 180 | 120 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 200 | 350 | 250 | 200-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 600 | 580 | 460 | 500 | 550 |
| பாகற்காய் | 350 | 300 | 200 | 200-250 | 250 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 100-130 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 130 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 200 | 300 | 250 | 200-250 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 300 | 200 | 250 | 200 | 300 |
| கறிமிளகாய் | 400 | 200 | 200 | 300-350 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 950 | 600 | 300-600 | 800 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 60 | 80 |
| தேசிக்காய் | 150 | 250 | 150 | 200-300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 110 | 50-110 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 300 | -- | 400 |
| வெங்காயப்பூ | 180 | 200 | 140 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 40 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 80 | -- | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை



(குருமன்காடு)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் "நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா -சிமாட் சூரன்களோடு" எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை வவுனியா காமினி மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு உரிய நட்டஈடு- சம்பளம் - காப்புறுதி தொடர்பான சேவைகள், ஈரிளவ் தொடர்பான சேவைகள், தொழிற்துறை பாடநெறிகள் தொடர்பான பதிவு, தொழில் முனைவாளர்களுக்கு அபிவிருத்தி மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, உத்தேச தொழில்வாய்ப்புகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற பல சேவைகள் இவ் நடமாடும் சேவையூடாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், அதிதிகளாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன், மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ. சரத் சந்திர, பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (5-6-250)

# அரச வேலை ஆட்சேர்ப்புக்கான வயதை 38 ஆக அதிகரிக்க வேண்டும்



(கொழும்பு)

அரச வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டதாரிகளின் வயது வரம்பை 38 ஆக அதிகரிக்க வேண்டுமென விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சேர்ப்புக்கான வயது வரம்பு 35 ஆக உள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக வயது வரம்பை திருத்தியமைக்க வேண்டுமென அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (5-6)

# மின்சாரம் தாக்கியதில் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தெனியாய பிரதேச பாடசாலையொன்றில் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிக்காக இல்லங்கள் தயார் செய்வதற்காக மூங்கில் மரங்களை வெட்டச் சென்ற இரு மாணவர்கள் மின்சாரம் தாக்கியதில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விளையாட்டுப்போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெறவிருந்த நிலையில் இரவுவேளை பாடசாலை மைதானத்தின் அருகில் மூங்கில் மரங்களை வெட்டச் சென்ற போதே மின்சாரம் தாக்கியுள்ளது.

மின் தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் தெனியாய ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்தோடு அவர்களில் ஒருவர் மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்படவுள்ளார். (5-6)

# ராஜபக்ஷ தரப்பினருக்கு மக்கள் மீது அக்கறை இல்லை

## சமிந்த விஜேசிறி



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவே முன்னிலையாவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. ராஜபக்ஷ தரப்பினர் இந்த நாட்டின் மீதோ மக்கள் மீதோ அக்கறை கொண்டவர்கள் அல்ல. மாறாக அவர்கள் தங்களின் அரசியல் தேவைகளுக்காகவே செயற்படுகின்றனர்.மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளை நாட்டு மக்கள் நன்கு அறிவர் எனவே நாமல் ராஜபக்ஷ எந்தவொரு வேடம் தரித்து வந்தாலும் மக்களுக்கு ராஜபக்ஷ தரப் பினர் மீது நம்பிக்கை ஏற்படாது.

ராஜபக்ஷ தரப்பினரின் அரசியல் நாடகங்களை மக்கள் நன்கு அறிவர் என சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மின்சார சட்டமூல வர்த்தமானி இரு வாரங்களில் வெளியிடப்படும்

## காஞ்சன

(கொழும்பு)

மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய புதிய மின்சார சட்டமூலம் அடுத்த இரண்டு வாரங்களில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு ஏப்ரல் இறுதி வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பிலான முன்னேற்றத்தை ஆராயும் மீளாய்வுக் கூட்டத்தின் போது இது தொடர்பில் கலந்துரையாடியதாக அமைச்சர் எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். சட்டமூலத்தை மீளாய்வு செய்த பின்னர், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாடு கடந்த திங்கட்கிழமை சட்டமா அதிபரால் வழங்கப்பட்டது. அதனடிப்படையில், வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு நபருக்கும் மீளாய்வு செய்வதற்கு குறைந்த பட்சம் இரண்டு வாரங்கள் அவகாசம் வழங்கப்படும் என குறித்த எக்ஸ் வலைத்தள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு :1992 - இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம் :6'<br>தகைமை/தொழில்: Business Management, own Business (Canada)<br>எதிர்பார்ப்பு : படித்த அழகான பெண்<br>தொ.இ: B/14384 | பிறப்பு -1977- கத்தோலிக்கம் (R.C)<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: BA, Teacher, விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் கத்தோலிக்கம் முன்னுரிமை<br>தொ.இ: G/14291 |
| பிறப்பு:1989- இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா: 32<br>உயரம் :5'9"<br>தகைமை/தொழில்: A/L. கடை (Own)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14385 | பிறப்பு-1995- இந்து<br>நட்சத்திரம் :பரணி<br>கி.பா: -27 1/2<br>உயரம் : 167 CM<br>தகைமை/தொழில்: Diploma in Information Technology<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14294 |
| பிறப்பு:-1969-இந்து<br>நட்சத்திரம் :சுவாதி<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்:A/L.விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: ஓரளவு படித்த பெண்<br>தொ.இ: B/14389 | பிறப்பு -1995- இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: -1/4<br>உயரம் :5'2"<br>தகைமை/தொழில்: Bsc,PhD<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்.Engineer<br>தொ.இ: G/13339 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:-Bsc , Agriculture Instructor<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13850 | பிறப்பு -1993-இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா:34 1/2<br>உயரம் : 158 CM<br>தகைமை/தொழில்: HNDA, MBA<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/13395 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உணவுப் பொருட்களை தாமதமின்றி வழங்க இஸ்ரேல் எல்லைகளை திறக்க வேண்டும்

### சர்வதேச நீதிமன்றம் உத்தரவு



(நியூயோர்க்)
காசாவிற்கு உதவிப் பொருட்கள் எந்தவிதமான தாமதமும் இல்லாத வகையில் கிடைக்க மேலும் பல எல்லைகளை இஸ்ரேல் திறக்க வேண்டுமென சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ்க்கு எதிரான போர் என்ற பெயரில் காசா மீது தாக்குதல் நடத்தி இனப் படுகொலை செய்வதாக குற்றம் சாட்டியது.


ஆனால் இஸ்ரேல் இராணுவம் அதை மறுத்தது. எங்களது நோக்கம் ஹமாஸ்தான். எங்களைப் பாதுகாப்பதற்காகவே இராணுவ நடவடிக்கை மேற்கொள்கிறோம்.

இந்த நிலையில் காசா மக்கள் உணவுப் பொருட்கள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். எல்லை வழியாக உணவு பொருட்கள் கொண்டு செல்ல முடியவில்லை என தென்னாபிரிக்கா மீண்டும் ஒரு குற்றச்சாட்டை முன் வைத்தது.

இந்த நிலையில் காசாவுக்கு உணவுகள், தண்ணீர், எரிபொருள், மருத்துவ பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் எந்தவிதமான தாமதமும் இல்லாத வகையில் கிடைக்க இஸ்ரேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இனப்படுகொலை ஒப்பந்தத்தின் கீழ் பாலஸ்தீன மக்கள் பாதிக்கும் வகையில் இஸ்ரேல் எந்தவிதமான இராணுவ நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என சர்வதேச நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

உத்தரவை நடைமுறைப் படுத்துவது குறித்து ஒரு மாதத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. (நி-5-6)

## அடுத்த தலைமுறைக்கான விமானத்தை உருவாக்கவுள்ள ஜப்பான் நிறுவனம்



(டோக்கியோ)
ஜப்பானில் உள்ள முன்னணி வாகன தயாரிப்பு நிறுவனமாக மிட்சுபிசி நிறுவனம், அடுத்த தலைமுறைக்கான பயணிகள் விமானத்தை உருவாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

பசுமைப் புரட்சி, புவி வெப்பமயமாதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அந்த நிறுவனம் விமானத்தை உருவாக்கவுள்ளது.

குறித்த விமானத்தில் கரியமில வாயு வெளியேறத்தை கட்டுப்படுத்தும் வகையில் ஹைட்ரஜன் எரிபொருள் என்ஜின் பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஜப்பானின் தொழிற்துறை அமைச்சகம் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2035 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு முதல்கட்டமாக 33 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## வடகொ

## களம

### வீட்டோ அ

(மொஸ்கோ) —
வடகொரியாவி
அமுல்படுத்துவன
குழுவின் வருடா
வீட்டோ அதிகா
துள்ளது.

அணு ஆயுதங்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகளை வடகொரியா தடையை மீறி செய்து வருவதால், அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை மேற்பார்வை செய்யும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்பு சபையில் அமெரிக்கா கொண்டு சென்றது.

வெ
வெ
ஒ
வெ
க

ப

## பட்டினியால் மக்கள் இறப்பதும் போர்க் குற்றமே -ஐ.நா



(நியூயோர்க்)
காசாவில் பட்டினி காரணமாக மக்கள் உயிரிழப்பதும் பாரிய போர்க்குற்றமாகவே கருதப்படுமென ஐ.நா அறிவித்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தீவிர தாக்குதல் காரணமாக அப்பகுதியிலுள்ள மக்கள் பாரிய பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் சர்வதேச நாடுகள் வழங்கி வரும் நிவாரணப் பொருட்களை இஸ்ரேல் இராணுவம் காசா மக்களை சென்றடைய விடாமல் தடுத்து வருவதால், அப்பகுதி மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பட்டினியால் மக்கள் உயிரிழப்பது பாரிய போர்க் குற்றமாகக் கருதப்படுமென ஐ.நா தெரிவித்துள்ளது. (ரி-5-6)

## ஈஸ்டர் தின ஆராதனைக்கு சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 45 பேர் பலி

### தென்னாபிரிக்காவில் சோகம்



(பிரிட்டோரியா)
தென்னாபிரிக்காவில் ஈஸ்டர் தின ஆராதனைக்காக ஆலயம் சென்று கொண்டிருந்த பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்ததில் அதில் பயணித்த சாரதி உட்பட 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் லிம்போபோ பள்ளத்தாக்கில் இடம்பெற்ற இவ்விபத்தில் அயல் நாடான பொட்சுவானாவில் இருந்து ஆராதனைக்கு தென்னாபிரிக்கா வந்த பக்தர்கள் குழுவினரே இவ்விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த பலர் ஹெலியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இவ் விபத்தின் போது பள்ளத்தாக்கில் விழுந்த பேருந்து தீப்பிடித்துக் கொ டதால் உயிர்ச்சேதம் அ கரித்துள்ளதாக தென் பிரிக்க செய்திகள் தெரிவி கின்றன. (நி-5-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியாவுக்கு ஆதரவாக
# மிறங்கிய ரஷ்யா

## அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானம் முறியடிப்பு

)

யாவின் பொருளாதாரத் தடைகளை
துவதைக் கண்காணிக்கும் நிபுணர்கள்
ருடாந்த புதுப்பித்தலை ரஷ்யா தனது
திகாரத்தைப் பயன்படுத்தி முறியடித்



பாலி
ளை
சய்து
பாரு
வை
ஐ.நா
க்கா

இதற்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்தன. ஆனால் இந்த வாக்கெடுப்பில் இருந்து சீனா ஒதுங்கிக் கொண்டது. எனினும் வடகொரியாவுக்கு ஆதரவாக ரஷ்யா களமிறங்கியது.

தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திய ரஷ்யா பொருளாதாரத்தடைகளை அமுல்படுத்துவதை கண்காணிக்கும் நிபுணர்கள் குழுவின் வருடாந்திர புதுப்பித்தலை முறியடித்தது.

உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக வடகொரியா ரஷ்யாவிற்கு ஆயுதங்களை மாற்றியதாக அமெரிக்கா தலைமையிலான குற்றச்சாட்டுகளுக்கு இடையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இராணுவ உறவுகளை ஆழப்படுத்த ரஷ்யாவும், வடகொரியாவுக்கு உறுதியளித்த நிலையில், தற்போது தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை இரு நாடுகளும் மறுத்துள்ளன.

(நி-5-6)

---

## ...ருந்து
## ...ர் பலி



த்துக் கொண்
சேதம் அதி
க தென்னா
கள் தெரிவிக்

(நி-5-6)

---

## வீதியில் திடீரென ஓடிய ராட்சத நெருப்புக்கோழி



(சியோல்)

தென்கொரியாவில் உள்ள சியோங்னாம் நகரில் நெருப்புக் கோழி ஒன்று வீதிகளில் ஓடிய காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

தடோரி பகுதியில் சுற்றுச் சூழல் பூங்காவிலிருந்து தப்பிய இந்த நெருப்புக்கோழி சாலைகளில் ஓடியதோடு சில வாகனங்கள் மீது மோதியுள்ளது.

இதனால் வாகன சாரதிகள் அதிர்ச்சியடைந்து வாகனங்களை நிறுத்தினர். சிலர் தங்களது செல்போன்களில் அதனை காணொளி எடுத்தனர்.

இதனால் சுமார் 1 மணித்தியாலத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சாலையில் நெருப்புக்கோழி ஓடிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(5-6)

---

## நெருக்கடியிலிருந்த மாலைதீவிற்கு உதவிக்கரம் நீட்டிய சீனா



(மாலே)

கடும் குடிநீர் பஞ்சத்தால் அவதிப்பட்டு வந்த மாலைதீவுக்கு திபெத் பனிமலைகளில் இருந்து 1,500 தொன் குடிநீரை சீனா வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த விடயத்தை மாலைதீவு அரசு அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த தீர்மானமானது சீனாவின் திபெத் தன்னாட்சி மண்டல தலைவர் யான் ஜின்ஹாய், மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவை கடந்த நவம்பரில் சந்தித்த போது எடுக்கப்பட்டதாக மாலைதீவின் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவினால் வழங்கப்பட்ட குடிநீரானது திபெத்தில் உயர் ரக தயாரிப்பு நிறுவனங்கள் குடிநீர் உற்பத்தி செய்கின்ற சுத்தமான தெளிவான அதிக கனிமங்கள் கொண்ட நீர் திபெத் பனிப்பாறைகளில் இருந்து பெறப்படுகிறது.

சீனாவுக்கு ஆதரவான அரசு மாலைதீவில் தெரிவானது முதல் சீனா பல்வேறு வகைகளில் மாலைதீவுக்கு உதவி வருகிறது.


அத்தோடு, மாலைதீவு ஜனாதிபதி சீனா அபாயகரமில்லாத ஆயுதங்கள் மற்றும் ஆயுத பயிற்சியை மாலைதீவுக்கு வழங்கவிருப்பதாக தெரிவித்துள்ளார்.(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடமையில்

(கொழும்பு)

**பண்டிகைக் காலங்களில் உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள், உணவு வகைகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை சோதனை யிட தொடங்கவுள்ளதாக பொதுச் சுகா தார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.**



நாடளாவிய ரீதியில் 3,000 பொது சுகாதார பரிசோதகர்கள் கடைகளை பரிசோதிப்பதற்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த சோதனை நடவடிக் கையின் போது தயாரிக்கப்பட்ட பல உணவு மாதிரிகள் சுவை பரிசோதகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தலை வர் உபுல் ரோஹன தெரிவித் துள்ளார்.

மேலும், பண்டிகை காலத் தில் உணவு தயாரிக்கும் நபர் களின் மருத்துவச் சான்றுகளை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளைபண்டிகைக் காலத்திற்காக உற்பத்தி செய் யப்படும் பல்வேறு உணவுப் பொருட்களை பரிசோதகர்க ளுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் உணவுப்பொருட்கள் தொடர்பில் அவதானமாக செயற் படுமாறும் அவர் தெரிவித் தார். (நி-5-6)

# அமைப்பு மாறினால் மட்டுமே உண்மை வெளிவரும்

## ஈஸ்ரர் தாக்குதல் குறித்து அருட்தந்தை காமினி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்கு தலின் பின்னணியில் உள்ள விடயங்களை கண்டுபிடிப்ப தற்கான முக்கிய தடையாக முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவே காணப்ப டுகின்றார் என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ தெரிவித்துள் ளார். ஊடகமொன்றிற்கு வழங் கிய பேட்டியில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று பல மாதங்களின் பின்னர் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முதல் நடவடிக்கை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற் கொண்ட உண்மையை கண் டறியும்ஆணைக்குழுவை செயல் இழக்கச்செய்ததே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த்ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் யார் என்பது என தனக்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்தி ருப்பது குறித்து கருத்து தெரி வித்துள்ள அருட்தந்தை சுயா தீன ஆணைக்குழுவை நிய மித்தால் மாத்திரமே உண்மை வெளிவரும் என குறிப்பிட்டுள் ளார். ஷானி அபயசேகர தலை மையிலான ஆணைக் குழுவை மீண்டும் நியமிக்கவேண்டும். சர்வதேசஅளவில் விசாரணை இடம்பெற வேண்டும்.

இதனை செய்தால் மைத் திரிபால சிறிசேன அதன் முன் னிலையில் தோன்றி சூத்திர தாரி யார் என்ற உண்மையை தெரிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்கு தலில் பொதுமக்கள் கொல்லப் பட்டதை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்கள் வாக் குகளை பெறுவதற்காக பயன்ப டுத்தக்கூடும். ஆட்சிமாற்றத் தின் போது அரசியல் வஞ்சகர் கள் மீண்டும் தெரிவு செய்யப் பட்டால் அது ஏற்கனவே பொரு ளாதார நெருக்கடி சட்டமொ ழுங்கின்மையினால் மோச மாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டி ற்கு மேலும் பேரழிவாக அமை யும்.

அமைப்புமுறையில் பாரிய மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே உண்மை வெளிவரும் அமை ப்பு முறை மாற்றம் ஏற்படுவ தற்கு அரசியல் நிர்வாகம் முற் றாக மறுசீரமைக்கப்படுவது அவசியம் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 80



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனச்சோர்வு

வர வர என் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஒருதர் சொன்னார். சரி சார் வேதாந்தியாக ஆகிவிட்டார் என்று எல்லோரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. அவருக்கு தன்னம்பிக்கை குறைய ஆரம்பித்து இருக்கிறது என்று அர்த்தம்.

அது மிகவும் ஆபத்து . அதை அப்படியே விட்டுவிட கூடாது. உடனடியாகவே பரிகாரம் தேடணும்

இன்றைக்கு பலருக்கு மனம் சுலபமாக ஓய்ந்து போகிறது. எதைப்பார்த்தாலும் அலுப் பாக இருக்கிறது. சோர்வாக இருக்கிறது. எதிலும் கலந்து கொள்ளுவதிலே ஒரு உற்சாகம் இல்லை மனச் சோர்வு வந்து விடுகிறது. மனச் சோர்வு தீர்வதற்கு மருந்து என்ன?

உடனேஅந்த மருந்து எந்தக் கடையில் கிடைக்கும் சொல்லுங்க என்று காசை எடுத்துக் கொண்டு, சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பாதீர்கள்.

மருந்து கடையில இல்லை... நம்மிடம் தான் இருக்கிறது.

கடையில் போய் இதற்கு மருந்து கேட்டீர்கள் என்றால் அங்கே இருப்பவர்.. உங்களிடம் இருந்தால் எனக்கு கொஞ்சம் கொடுத்து விட்டு போங்கள் என்பார்.

ஏன் என்றால் அதற்கு அவவளவு டிமாண்ட் இருக்கிறது. இப்போது நான் விடயத்திற்கு வாரேன். சுலபமாக முடிக்கக் கூடிய காரியம் தான் கொஞ்சம் முயற்சி செய்து பார்ப்போமே.

ஆள் பாதி , ஆடை பாதி என்று சொல்லுகின்றோம் அல்லவா. ஆள் கால், ஆடை முக்கால் இது தான் சரி.

நல்ல துணி மணிகள் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்கின்றன என்று ஆராய்ச் சியாளர்கள் சொல்லுவார்கள். அதனாலே முடிந்த அளவுக்கு ட்ரெஸ் பண்ணணும். அப்புறம் நிறைய விடயங்களைப் தெரிந்து வைத்துக்கொள்ளணும். அது உபயோப்படுகிறதா இல்லையா என்பதை பற்றி கவலை இல்லை. இது தன்னம்பிக்கையை வளர்க்கும் என்று ஆராய்ச்சிகள் சொல்கிறது. ஒவ்வொரு நாளும் புதிதாக ஒரு விடயத்தை தெரிந்து வைத்து கொள்ள வேண்டும் என்று ஒரு முடிவு எடுங்கள்.

ஒரு முக்கிய விடயம்! உங்களை யாராவது அலட்சியமாக நினைக்கின்ற மாதிரி தெரிகிறதா? அவர்கள் பக்கம் தலை வைத்துக் கூட படுக்க வேண்டாம். உங்களை யாராவது மட்டம் தட்டுறாங்களா... உங்கள் மனம் கவலை கொள்கின்றபடி யாராவது நடந்து கொள்கின்றார்களா... அவர்களை எல்லாம் உதறித்தள்ளுங்கள்! இரக்கமே காட்டாதீர்கள்! என்ன சார் அவங்க மட்டும் உயர்வா... எல்லோரும் ஒரே மாதிரித் தான் இந்த உலகத்தில் பிறந்து இருக்கின்றோம்! அதனால் அலட்சியப்படுத்துறவர்களை மனதால் அலட்சியப்படுத்திப் பாருங்கள்! அதன் பிறகு நீங்கள் தான் ராஜா!

உங்களுக்கே பிடிக்காதது ஏதாவது உங்களிடம் இருக்கிறதாக தெரிகிறதா? பரவாயில்லை. உடனே ஒதுக்கித் தள்ளுங்கள். உங்களுடைய எடையை குறைக்க வேண்டுமா? உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்க வேண்டுமா? குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமா? எதுவாக இருந்தாலும் உடனே நடவடிக்கை எடுங்கள்! தள்ளிப்போட வேண்டும்

உங்களை வேதனைப்படுத்துகின்ற விடயம் எதுவாக இருந்தாலும் சரி அதைப்பற்றி பேசுவதை உடனே நிறுத்துங்கள்!

உங்களாலே சீர் செய்ய முடியாதது சிலது இருக்கும். அதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்வது தான் நல்லது! உயரம் ஆறு அடி இருக்கின்றேன்... அதை நாலு அடியாக குறைப்பது தேவையில்லை என்று நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது! அது எப்படி Press ஆக செய்ய முடியும்?

சொந்தக்காரர்கள் இப்படிஇருக்கிறார்கள் என்று கவலை சில பேருக்கு இருக்கும். அவர்கள் அப்படித் தான் அதோட விட்டிடுங்க. உங்களிடம் நிவர்த்தி செய்ய முடியாத குறைகள் சிலது இருக்கலாம் . அப்படிப்பட்ட குறையோடு வாழ்க்கையிலே முன்னுக்கு வந்தவர்களைப் பற்றி தெரிந்து கொண்டு அவர்கள் செய்த சாதனைகளை நினைத்துப் பாருங்கள். அது உங்களை உற்சாகப்படுத்தும்! உங்களுக்கென்று ஒரு தனித்தன்மை ஏதாவது இருக்கும். அது எதுவென்று புரிந்து கொண்டு முழுதாக மனதை அதிலே செலுத்துங்கள். உங்களுக்கு என்று எதாவது ஒரு சிறப்பு அம்சம் இருக்கும். அழகான கண், கறுப்பான கூந்தல், நீளமான விரல், லேசான புன்னகை, நுட்பமான புத்திசாலித் தனம். இப்படி ஏதாவது இருக்கும். அதை மெதுவாக கண்டுபிடிக்கவேண்டும். அதை சிறப்பாக வெளிப்படுத்த வேண்டும். அது பற்றிய உணர்வோடு இருக்க வேண்டும். எப்போதாவது மனம் சோர்ந்து போனால் உங்கள் தனித்தன்மையிலே மனதைச் செலுத் துங்கள் சரியாகிப் போய்விடும். அதிக கட்டுப்பாட்டோடு இருப்பவர்கள், அதிக ஆர்ப்பாட்டமாக இருப்பவர்கள் இவர்கள் எல்லாம் மனதிற்குள் கவலையோடு இருப்பார்களாம்.

சார் ஒரு ரகசியம்..... உங்களைச்சுற்றி இருப்பவர்கள் எல்லாம் அதிக தன்னம்பிக்கை உள்ளவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். அவர்களுக்கும் உள்ளுக்குள்ளே உதறல்தான். வெளியில் நடித்து கொண்டு இருப்பார்கள்.

உங்களுக்கு வயிற்றிலே புளியை கரைத்தால் அவர்களுக்கு பெருங்காயத்தை கரைத்தது மாதிரி இருக்கும். அவ்வளவு தான்! அச்சம் தேவை தான். ஆனால் அதை வெளியே காட்டிக் கொண்டு இருக்கக்கூடாது. ரொம்ப அடக்கமாக இருக்கிறேன் என்று சொல்லி கொண்டு வீட்டிற்கு உள்ளேயே அடைபட்டுக் கொண்டு இருக்காதீர்கள். வெளியே வாருங்கள். தன்னம்பிக்கையோடு இருக்கிறோம் என்று காட்டிக் கொள்வதற்கு கொஞ்சம் நடிப்பதில் கூட தப்பு இல்லை. தினமும் ஒரு விடயத்தை நிறைவாக செய்யுங்கள். அது சாதாரணமாக அற்ப விடயமாக இருந்தால் கூட சிறப்பாக இருக்க வேண்டும். அது ஒரு மன நிறைவைக் கொடுக்கும். மனச் சோர்வு நீங்குவதற்கு ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வைத்திருக்கிற வழிமுறைகளை எல்லாம் இப்போது உங்களிடம் சொல்லி விட்டேன். இதற்கு பதிலாக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். இந்த வழிமுறைகளை எல்லாம் கடைப்பிடித்து பார்த்து விட்டு அதில் பலன் கிடைத்தது என்றால் ஒரு வரி எழுதி போடுங்கள்! ஏன் என்றால் [illegible] தான் நான் ஆரம்பிக்க வேண்டும்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையார் கட்டில் கசிப்பு நிலையம் முற்றுகை

## ஒருவர் கைது



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு குளப்பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்ட வேளை இக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கசிப்பு 56,000 மில்லி லீற்றர், 3 பரல்களுக்குள் 75,000 மில்லி மீற்றர் எரிந்த கோடா மற்றும் கசிப்பு உற்பத்தியாக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடனும் உடையார்கட்டு தெற்கு மூங்கிலாறு பகுதியினை சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(நி-5-6-299)

## 27 கியூப் மணல் பறிமுதல்

(தருமபுரம்)

கேருடாவில் பகுதியில் அனுமதியின்றி மணல் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்த இரு சந்தேக நபர்களை ஒட்டசுட்டான் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 27 கியூப் மணல், மணல் ஏற்றுவதற்காக பயன்படுத்திய இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் பறிமுதல்செய்யப்பட்டுள்ளது.(5-6-316)



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் வவுனியா வடக்கு ஒலுமடு தமிழ் மகாவித்தியாலயத்திற்கு நேற்று முன்தினம் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று கையளிக்கப்பட்டது.

(படம்: வசந்தரூபன்)

# கிராமிய வீதிப்பாலங்கள் புனரமைப்பு தொடர்பில் ஆராய்வு

(தருமபுரம்)


கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கிராமிய வீதிகள், பாலங்கள் புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மாலை கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் கிராமிய வீதி மற்றும் பாலங்களின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன. குறித்த கலந்துரையாடலில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லை மன்னார் மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், யாழ்.கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரின் இணைப்பாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், அமைச்சின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர்கள், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், கிராமிய மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3075


### சிவன்




### தரன்




### குமார்




### கௌசி




### பிரமிளா




### கனுசிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 442



தங்களை இழப்பதைக் காட்டிலும் பெரிய நஷ்டம் சோழ நாட்டுக்கு வேறு என்ன இருக்க முடியும்? தங்களுக்கு ஆபத்து வருவதற்குக் காரணமாயிருந்துவிட்டு அப்புறம் இந்தக் கொடும்பாளூர்க் கொடும்பாவி ஒரு கணமும் உயிரை வைத்துக் கொண்டிருப்பேனா?"

"அப்படியானால் என் உயிரை நான் காப்பாற்றிக் கொள்ளுவது இன்னும் முக்கியமாகிறது."

"அதைக்காட்டிலும் முக்கியமானது இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை."

"அதற்கு எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"சொல்லுங்கள் ஐயா!"

"குதிரை மேல் பிரயாணம் செய்யும் வரையில் சற்று முன் வந்த அம்பைப்போல் வேறு அபாயங்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும்."

"நடந்து போகலாம் என்று சொல்லுகிறீர்கள்? அல்லது."

"எனக்கு யானைகளின் பாஷை நன்றாய்த் தெரியும் யானைகள் நான் சொன்னபடி கேட்கும் என்று தாங்கள் அறிவீர்கள் அல்லவா?"

ஆம், ஐயா! யானைப்பாகன் வேடம் பூண்டு இந்த இலங்கைத் தீவின் பெரும் பகுதியைத் தாங்கள் சுற்றிப் பார்த்திருப்பதும் எனக்குத் தெரியும்."

"ஆகவே நான் சொல்லுகிறது என்னவென்றால், மறுபடியும் சிறிது நேரம் யானைப் பாகன் ஆகிறேன். இப்போது யானையை நடத்துகிறவன் கொஞ்சத்தூரம் என் குதிரை மேல் ஏறிக்கொண்டு வரட்டும்."

இதைக் கேட்ட சேனாதிபதி சிறிது மனத்தடுமாற்றமடைந்ததாகத் தோன்றியது. இளவரசருடைய யோசனைக்கு யாராவது ஆட்சேபம் சொல்ல மாட்டார்களா என்று ஆவலுடன் சுற்றும் முற்றும் பார்த்தார். ஆனால் எல்லாரும் 'கம்'மென்று இருந்தார்கள்.

"ஐயா! யானைப் பாகனுக்குக் குதிரை ஏறத் தெரியுமோ, என்னமோ?"

தெரியாவிட்டால், நடந்து திரும்பிப் போகட்டும்.

"அந்தப் பெண் பெரிய சங்கோசியாயிருக்கிறாளே? அவள் தங்களுக்குச் சரி சமமாக யானை மீது உட்கார மாட்டேன் என்று சொன்னால்?

"கீழே குதித்து நடந்து வரட்டும்"

"தங்கள் சித்தம், இளவரசே!"

இளவரசர் உடனே குதிரை மீதிருந்து குதித்தார். யானையின் அருகில் சென்றார். பூங்குழலியின் கரிய கண்கள் ஆர்வத்தினால் நீண்டு வியப்பினால் அகன்று அவரை நோக்கின. யானைப் பாகனை இறக்கிவிட்டுத் தாம் யானைமீது பாய்ந்து அதன் கழுத்தில் உட்கார்ந்து கொண்டார். தடைப்பட்ட பிரயாணம் மறுபடியும் ஆரம்பமாகியது.

பூங்குழலி புளகாங்கிதம் அடைந்தாள். யானையின் முதுகின் மேலிருந்து மேகங்களின் மீது பாய்ந்தாள். வான வெளியில் உலவினாள். சொர்க்கத்தை எட்டிப்பார்த்து அதன் விவரிக்க முடியாத இன்ப சுகத்தின் இயல்பு இதுவென்பதை ஒருவாறு உணர்ந்து அறிந்தாள். 'ஆகா! இதுவென்ன தேவகானமா? இவ்வளவு இன்பமாயிருக்கிறதே! இல்லை தேவகானத்துக்கு இவ்வளவு இனிமை ஏது? இளவரசர் அல்லவா பேசுகிறார்!'

"சமுத்திரகுமாரி! என்னுடன் இந்த யானை மீது தனியாக இருப்பது உனக்கு அருவருப்பாயிருக்கிறதா?"

"ஏழு ஜன்மங்களின் நான் செய்த தவத்தினால் இந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது, பிரபு!"

"திடீரென்று இந்த யானைக்கு மதம் பிடித்து இது ஓட ஆரம்பித்தால் நீ பயப்படுவாயா?"

தாங்கள் பக்கத்தில் இருக்கும்போது வானம் இடிந்து விழுந்தாலும் பயப்படமாட்டேன், ஐயா!

உன் படகை எங்கே விட்டுவிட்டு வந்திருக்கிறாய் பூங்குழலி?

யானை இறவுத்துறைக்குச் சமீபத்தில் ஐயா!

இக்கரையிலா, அக்கரையிலா?

அக்கரையிலே தான் படகை நிறுத்தத் தனி இடம் கிடைத்தது. அங்கேயே படகை நிறுத்திவிட்டு வந்தேன்.


யானை இறவுத்துறையை எப்படி கடந்து வந்தாய்?

"நான் வரும்போது கடல் நீர் மிகவும் குறைவாயிருந்தது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறுவனின் உபதேசம்



அரசன் சொன்னான் கழுத்தில் கிடந்த விலையுயர்ந்த மணி மாலையயும் என் ஆபரணங்களையும் தந்துவிட்டேன் என்று.

அதற்கு சிறுவன் இவையெல்லாம் உன் பிள்ளைகளுக்குரியது. உனக்கல்ல. எனவே வேண்டாம் .

அரசன் இந்த நாட்டையே தருகிறேன் என்றான்.

சிறுவன் அதற்கு இந்த நாடு மக்களுக்கு சொந்தம். இதுவும் வேண்டாம். உனக்கு உரிய சொந்தமான பொருளை உணர்ந்து கொடு.

அரசன் என் உடல் எனக்குத்தான் சொந்தம். அதைத் தருகிறேன் என்றான்

உன் உயிர் பிரிந்ததும் அது மண்ணுக்குச் சொந்தம். நீ தூங்கும் போது உன் உடலின்மேல் ஒரு பாம்பு ஊர்ந்தாலும் உனக்குத் தெரிவதில்லையே? அப்படி இருக்க உனக்கு அது எப்ப டிச் சொந்தம்?"

இப்படியே ஒவ்வொன்றையும் சிறுவன் மறுத்துச் சொல்ல அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள். தந்து விடுகிறேன் என்றான்.

உன் மனம்தான் உனக்குச் சொந்தம். எல்லோர் முன்னிலையிலும் தானம் கொடு என்றான் சிறுவன்.

அப்படியே தான சம்பிரதாயங்கள் முடிவடைய சிறுவன் வெளியில் புறப்பட்டான்.

அரசன் சிறுவனை நோக்கி, குருவே! உபதேசம் செய்யாமல் செல்லுகிறீர்களே! என வினவ, அச் சிறுவன், அரசே! உன் மனதை எனக்குத் தானம் செய்தது உண்மையில்லை. இன்னும் உன் மனம் உன்னிடமே இருக்கிறது.

எப்படி நான் உபதேசிக்காமல் செல்வதை நீ எப்படி உணர்ந்து கேட்டாய்? என்றான்.

அரசன் திடுக்கிட்டு வணங்கி, குருவே! உங்களின் ஆணைப்படியே நடக்கிறேன். இனி என்வயம் ஏதுமில்லை என்றான்.

சிறைப்பிடித்தவர்களை விடுதலை செய்க என்றான் சிறுவன். அப்படியே நடந்தது. பின்னர் சிறுவன் உபதேசித்தான். என்ன உபதேசித்திருப்பான்?

அரசே உருக்கண்டு எள்ளாமை வேண்டும். உன் உடலில் உயிர் உள்ள வரை உனக்கு உன் மனம் மட்டுமே சொந்தம்.

அதுவும் உணர்வு இருக்கும்போது மட்டுமே. தூங்கும் போது மனம் உனக்குச் சொந்தமல்ல. ஆகவே, உணர்வால் மனத்தை அடக்கு. எப்பொழுதும் நீ உன் உணர்விலேயே நில். அது உனக்கு இறைவனை அடைய வழி காட்டும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விபத்தைத் தடுக்கும் திட்டத்தை யாழ்.பல்கலைக்கழகம் முன்மொழிய வேண்டும்

நம் தமிழர் பிரதேசத்தில் நாள்தோறும் இடம்பெறுகின்ற விபத்துச் சம்பவங்களால் மனித உயிரிழப்புகள் ஏற்பட்டவண்ணமுள் ளன.

இவ்வாறான உயிரிழப்புகள் உயிரிழப்போடு மட்டும் முடிந்து போவதில்லை என்பது அனைவரும் அறிந்ததே.

விபத்துக் காரணமாக ஒரு வீட்டில் தந்தை அல்லது தாய் அல்லது பிள்ளை இறந்து போனால் அந்தக் குடும்பம் துன்பத்தில் துவண்டு போய்விடும்.

குறித்த விபத்துக்குப் பின்னர் அந்தக் குடும்பம் மீண்டெழுவதென்பது முடியாத காரியம்.

இது ஓர் உதாரணம் மட்டுமே. தவிர, வீதி விபத்துக்களின்போது ஒட்டுமொத்தக் குடும்பமும் உயிரிழந்த கொடுமைகளும் உண்டு.

இவ்வாறாக எங்கள் தமிழர் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது பற்றி நாம் சிந்திக்காத ஒவ்வொரு கணப்பொழுதும் ஆபத்தானவை.

எனினும் இது விடயத்தில் நம் அரசியல்வாதிகள் ஒருபோதும் தலையிடமாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை விபத்துக்களால் தமிழ் மக்கள் உயிரிழப்பது அவர்களுக்கு ஒரு பொருட்டேயல்ல.

அவர்களுக்கு தங்களின் இருப்பை ஞாபகப்படுத்துவதற்கும் வாக்குகளைப் பெறுவதற்கும் உரிய வகையில் மரணங்கள் நடந்தாக வேண்டும். அப்போதுதான் அவர்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள். பாராளுமன்றத்தில் கதைப்பார்கள்.

மற்றும்படி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள், பொதுமக்களின் நடமாட்டம் அதிகமாக உள்ள நேரத்தில் கனரக வாகனங்களை செலுத்துவது போன்ற விடயங்கள் குறித்து இம்மியும் கவனம் செலுத்த மாட்டார்கள்.

உண்மையில் மக்களின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று எவர் நினைக்கின்றாரோ அவரே மனிதநேயமுள்ளவராவார்.

எனவே நீண்டு செல்கின்ற விபத்து மரணங்களைத் தடுத்து நிறுத்த, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆய்வுகளை மேற்கொண்டு பொருத்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

கூடவே விபத்துக்களைத் தடுப்பதற்கான செயலமர்வுகளை சாரதிகளுக்கு நடத்துவது, நம் பிரதேசத்தில் இருக்கக்கூடிய பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் தொடர்பில் தகவல்களைச் சேகரித்து; அங்கு பாதுகாப்பான நடைமுறைகளை ஏற்படுத்துவது, பொலிஸாரின் அவதானிப்புகளை அதிகரிப்பது, முக்கியமான இடங்களிலேனும் கண்காணிப்புக் கமராக்களை பொருத்த நடவடிக்கை எடுப்பது, சாரதியப் பயிற்சி தொடர்பில் விசேட செயன்முறைகளை வலுப்படுத்துவது என்றவாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்மொழிவுகளைத் தயாரித்து, அதனை அரச நிர்வாகத்துடன் சேர்ந்து அமுலாக்க வேண்டும்.

இந்த அமுலாக்கம் வெற்றி பெறும்போது, மக்கள் சமூகத்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை வாழ்த்துவர், போற்றுவர். எங்கே முன்வாருங்கள்.

# போதைப் பொருள், பாதாளக் குழுக்களை முற்றாக ஒழிக்கும் வரை யுக்திய தொடரும்

## தேஷபந்து தென்னக்கோன்

(கொழும்பு)

நாட்டில் போதைப் பொருள் மோசடி மற்றும்பாதாளக்குழு செயற்பாடுமுற்றாக ஒழிக்கப் பட்டுள்ளதாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வரை யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்என பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காலிக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் ஊடகங்களை சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்த நாட்டில் போதைப் பொருள் மோசடி மற்றும்பாதாளக் குழு செயற்பாடு முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வரை யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

ஒவ்வொரு நாளும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் பாதாளக் குழுசெயற்பாடுகள், போதைப்பொருள் விற்பனை தொடர்பில் பெரிதும் அச்சம் அடைந்துள்ளனர்.

எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என தெரிவித்தார். (5-6)

# சிறைச்சாலை கைதிகள் இருவர் தப்பியோட்டம்

## அநுராதபுரத்தில் சம்பவம்

(கொழும்பு)

அநுராதபுரம் திறந்த வெளி சிறைச்சாலையில் இருந்த இரு கைதிகள் நேற்று வெள்ளிக்கிழமை தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த இரு கைதிகளும் பார்வையாளர்களுக்காக திறக்கப்பட்ட சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலையில் வேலை செய்து வந்துள்ளனர்.

இருவரும் தங்களின் சிறைச் சீருடைகளை களைந்துவிட்டு சிவில் உடைகளில் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்ய அநுராதபுரம் பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (5-6)

# ஆண்டு நிறைவு விழாவும் கால்கோள் விழாவும்

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயத்தின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சரஸ்வதி முன்பள்ளியின் 39 ஆவது கால்கோள் விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிப 3 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள பொற்பதி அறிவாலயத்தில் அதன் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர் சு.சண்முககுமார், யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பெ.வசந்தன், கௌரவ விருந்தினர்களாக சமூக சேவையாளர் அ.சிவகுருநாதன், சரஸ்வதி முன்பள்ளியின் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி. சரோஜாசிவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5-6)

# தாதியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படையில் தாதியர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக தெரியவருகிறது.

யாழ். போதனா மருத்துவமனையின் செயற்பாடுகளை வினைத் திறனாக முன்னெடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்ற ஆலோசனைக் குழு கலந்துரையாடல் நேற்று இடம்பெற்ற போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் மூலம் யாழ். போதனா மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், தாதியர் பற்றாக்குறை காரணமாக முழுமையான சேவையினை மக்களுக்கு வழங்கமுடியாது இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதனாவில் தற்போதைய உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படையில் அண்ணளவாக 1800 தாதியர்களுக்கான தேவை இருக்கின்ற நிலையில் தற்போது சுமார் 650 தாதியர்கள்மாத்திரமே சேவையாற்றி வருகின்றனர்.

எனவே முடிந்தளவு தாதியர்களை இணைத்துக் கொள்வதற்கான அனுமதிகளை பெற்றுத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-33)

# சுமார் ரூ.11 கோடி பெறுமதியான சட்டவிரோத சொத்துக்கள் பறிமுதல்

(கொழும்பு)

சுமார் 11 கோடி ரூபாய் பெறுமதியான தடை செய்யப்பட்ட வாகனங்கள் உள்ளிட்ட சட்ட விரோத சொத்துக்களை [illegible] பறிமுதல் செய்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

காலி அம்பலாங்கொட மற்றும் அஹூங்கல்ல ஆகிய பிரதேசங்களில் பாதாளக்குழுவுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் வாகனங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக லொறி, வான் உட்பட 2 முச்சக்கர வண்டிகள், 9 மோட்டார்சைக்கிள்கள், 3 மீன்பிடிபடகுகள் மற்றும் 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய காணி மற்றும் வீடு, வர்த்தக நிலையங்கள் என்பன இவற்றுள்ள உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

34



இக்காலப் பகுதியில் இலங்கை அரசியலில் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழியலகாக "மொழி" மாற்றம் பெறலானது என்பது குறிப்பிடத் தக்கது. சுதேசிய மொழிகளுக்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதாகக் குரல் கொடுத்த பண்டார நாயகா ஐக்கியதேசியக்கட்சியின் கொள்கைகளை எதிர்ப்பதற்கும் சிங்கள மொழிக்கு மட்டும் அரச கரும அந்தஸ்தைக் கொடுப்பதற்கும் என 1955 இல் மக்கள் ஐக்கிய முன்னணி எனும் அரசியல் கூட்டினை அமைத்து தனது அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்தார்.

அவ்வாறே, "சிங்களத்தை மட்டும்" முன்னிறுத்தும் மொழிக் கொள்கையால் மக்கள் ஐக்கிய முன்னணி பெறவுள்ளஅரசியல் ஆதரவு குறித்த அச்சத்தின் காரணமாக ஐக்கிய தேசியக்கட்சியும் 1955இல் "சிங்களம் மட்டுமே நாட்டின் அரச கருமமொழியாக இருத்தல் வேண்டும்" என்று பிரகடனம் செய்தது.

இதன் விளைவாக 1956 பொதுத்தேர்தல் காலத்தில் பல சிங்களச் சார்புக்கட்சிகள் "சிங்களம் மட்டும்" என்ற அரசகரும மொழிக் கொள்கைக்கே தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன. இதுவே அவ்வாண்டுப் பொதுத்தேர்தல் பிரச்சாரத்தையும் ஆட்கொண்டிருந்தது. இந்தநிலைப்பாடே அத்தேர்தலில் பண்டாரநாயகாவின் வெற்றிக்கும் வழிவிட்டது.

ஆதலால், 1956 இல்பண்டார நாயக்கா பிரதமராகப் பதவியேற்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபோது "சிங்களம் மட்டும்" எனும் மொழிக் கொள்கையால் உந்தப்பட்ட சிங்கள பௌத்தர்கள் அவர்களது உணர்வுகளை அடையாளம் காண விரும்பியிருந்த ஒரு தலைவராக பண்டார நாயக்காவைக் கண்டதுடன் தமது நீண்டகால விருப்பத்தை உடனடியாக நிறைவேற்றும் படியும் அவரை வலியுறுத்தினர்.

ஆட்சியதிகாரத்துக்கு வந்ததை அடுத்து சிங்கள-பௌத்த மத குருமார்களது கோரிக்கைக்கும் பெரும்பான்மையின சிங்கள மக்களது விருப்பத்துக்கும் அமைய "சிங்களம் மட்டும்" அரச கருமமொழிக்கொள்கையை நிறைவேற்றுவதற்கு தன்னை அர்ப்பணிப்பவராக பண்டாரநாயக்கவும் மாறலானார். இதனால், பிரதமரான சில மாதங்களுக்குள் பண்டாரநாயக்கா தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக தனது அரசாங்கத்தின் முதலாவது மசோதாவாக "சிங்களம் மட்டும் மசோதா" எனப் பிரபல்யமாக அழைக்கப்பட்ட 1956 அரச கரும மொழிகள் சட்டத்துக்கான முன்மொழிவை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

**இனவிரிசலை உண்டாக்கிய சிங்களம் மட்டும் சட்டம்**

பண்டாரநாயக்கா இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஒன்று தனக்குக் கிடைக்குமாயின் கிடைத்து அடுத்த 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை இந்த நாட்டின் அரச கரும மொழியாக மாற்றிக் காட்டுவேன் என தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் அவர் சிங்கள மக்களின் மனங்களைக் கவரும் வகையில் ஆற்றிய உரையின்படி பிலிப் குணவர்த்தன போன்ற இனவாதிகளின் முழு ஒத்துழைப்புடனும் 8 ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடனுன் தனிச் சிங்களச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார்.

இச் சட்டமூலம் 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட போது சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி என். எம். பெரேரா மற்றும் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, கம்யூனிஷ்ட் கட்சியை சேர்ந்த கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க போன்றவர்கள் சிங்கள மொழியைப் போன்று தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப்படல் வேண்டுமென வாதாடினார்கள் ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை. தமிழ்க் கட்சிகளும் (இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) "தனிச் சிங்களச்" சட்டத்தை கடுமையாக எதிர்த்தன.

பாராளுமன்ற விவாதத்தில் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா சிங்களம் மட்டும் சட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் "ஒரு மொழி இரண்டு தேசங்கள்.இரண்டு மொழிகள் ஒரு தேசம் என சுருக்கமாகக் கூறிச் சென்றார்.

(கொல்வினின் இந்தக் கூற்றை தமிழ் சமூகத்தினர் பாராட்டுகின்றனர். அதே கொல்வின் அரசியலமைப்புத்துறை அமைச்சராக இருந்த போதே 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்பு வரையப்பட்டது. அதனை வரைவதில் முன்னணியில் இருந்து உழைத்தவரும் அவரே. ஆனால் தாம் போதித்த அந்தக் கொள்கையை அந்த யாப்பு வரைவின் போது பின்பற்ற அவரே பின்வாங்கினார். அந்த யாப்பிலும் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக அங்கிகரிக்கபட்டது. இதுவும் அரசியல் சந்தர்ப்பவாதமே.)

"தனிச் சிங்களச்" சட்டம் பற்றிப் பேசும் போது, "ஏற்கெனவே இது இனக் கலவரத்தை உருவாக்கி விட்டது. இந்தச் சட்டமூலத்தால் இனிவரும் காலங்களில் இனவிரிசல் பல மடங்கு அதிகமாகும். ஒவ்வொரு உத்தரவும் இன்னும் பிரிவினையைத் தூண்டும்" என கம்யுனிஸ்ட் கட்சியின் பீற்றர் கெனமன் பாராளுமன்ற விவாதத்தில்கூறினார்.

'நான் உங்களிடம் மன்றாடுகிறேன், தயவுசெய்து நீங்கள் செய்யும் இந்தக் காரியத்தினது (சிங்களத்தை மட்டும் உத்தியோகபூர்வ மொழி ஆக்குதல்.) பாரதூரத் தன்மையை உணருங்கள். நீங்கள் இந்த நாட்டை பல தலைமுறைகள் பின்கொண்டு செல்கிறீர்கள். இனிவரும் சந்ததி இந்த நாட்டை பாழாக்கியதற்காக எம் அனைவரையும் சபிக்கப்போகிறது.' என்று உணர்ச்சி பொங்க கலாநிதி என். எம். பெரேரா பேசினார்.

இவ்வாறு எத்தனை தூர நோக்குடைய கருத்துக்கள் பாராளுமன்றத்தில் கூறப்பட்டாலும் இவையெல்லாம் பண்டாரநாயக்கவையோ, அவருக்கு ஆதரவளித்த ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டையோ மாற்றவில்லை. 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பின் பின் நிறைவேற்றப்பட்டபோது 66 பேர் ஆதரவாகவும், 29 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

இச் சட்டம்2/3 பங்கு பெரும்பான்மை பெறாதே நிறைவேறியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இம்மசோதா 1956 யூலை 6இல் செனட் சபையில் நிறைவேற்றப்பட்ட போது 19 பேர் ஆதரவாகவும் 6 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர். இச் சட்டம் 1956 ஜூலை 7 இல் இருந்து நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டது.

பண்டாரநாயக்க என்ற தனி மனிதன் தனது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு மொழியை மையமாகக் கொண்டு ஆடிய அரசியல் விளையாட்டு இந்த நாட்டை இரத்தச் சகதிக்குள் தள்ளிவிட்டது என்று தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் கரும்புள்ளியாகத் திகழும் "தனிச் சிங்கள" சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, தமிழரது எதிர்ப்பரசியல் எஸ்.ஜே.வி செல்வநாயகம் தலைமையில் சத்தியாக்கிரக வடிவமெடுத்தது. இதனைத் தொடர்ந்து தீர்க்க தரிசனம் மிக்க தலைவர்களின் கணிப்பின் படி கலவரங்களும் அமைதியின்மையும் உருவானது.

**காலிமுகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டம் 1956.06.05**

தனிச் சிங்கள சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றைய தினமே (1956 ஜூன் 5 ஆம் திகதி) எஸ்.ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் சாத்வீக வழிகளில் பாராளுமன்றத்திற்கு முன்னே காலி முகத்திடலில் 200 பேர் கொண்ட சத்தியாக்கிரகம் எனப்படும் அமைதி வழியிலான எதிர்ப்பில் ஈடுபட்டது. அரசியல்கட்சி வேறுபாடுகளை மறந்து ஜி.ஜி. பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம் ஆகியோரும் சத்தியாக்கிரகத்தில் இணைந்து கொண்டனர்.

காலி முகத்திடலுக்கு ஊர்வலமாக வந்த காடையர்கள் அங்கே சத்தியாக்கிரகம் இருந்த தமிழர்கள் மீது வன்முறைப் பிரயோகம் செய்து பலரைத் தாக்கினர். இவை நடந்த போதும் பொலிஸார் பார்வையாளராக நின்றதாக கூறப்படுகிறது. வட்டுக்கோட்டை பா.உ. ஏ.அமிர்தலிங்கம், சாவகச்சேரி பா.உ. வி. என். நவரத்தினம், கோப்பாய் பா.உ. கு. வன்னியசிங்கம் போன்றோர் காயமடைந்தனர்.அன்று மாலை ஒரு மணியளவில் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

தமிழ்த் தலைவர்களுக்கு எந்த விதப் பாதுகாப்பையும் அளிக்காது வன்முறையாளர்களுக்கு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்காது பிரதமர் பண்டாரநாயக்காவும் பாராளுமன்ற முன்றலிலிருந்து நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார். தாக்குதலுக்குள்ளாகி இரத்தம் தோய்ந்த ஆடைகளுடனேயே சில தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்று அம்மசோதாவுக்கு எதிராக வாக்களித்தனர் என்பதும் சிங்கள-தமிழ் இன முரண்பாடு விடயத்தில் இரத்தம் சிந்தப்பட்ட முதலாவது சாத்வீகப் போராட்டம் அப்போது தான் ஆரம்பமானது என்பதும் வரலாற்று உண்மைகளாகும்.

எனினும், பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசுக்கட்சி மக்களை சட்ட மறுப்பு இயக்கங்களில் ஈடுபடுத்தி சட்டங்களை மீறத்தூண்டுவது இராஜ துரோக குற்றமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித் பிரேமதாஸ...

காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட மேலும் சில கட்சிகளுடனும் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடவும் சஜித் பிரேமதாஸ ஆலோசனைகளை நடத்தி வருகிறார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பெயரில் இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்பட உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் தலைவர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் பதவி வகிக்கும் அமைச்சர்கள் குழுவொன்றும் புதிய கூட்டணியில் இணைய விருப்பம் வெளியிட்டுள்ளதாக தெரிவித்த அவர், அவர்கள் உட்பட மேலும் பலர் தமது கட்சியில் இணையவுள்ளதாகவும் கூறினார்.

எவ்வாறாயினும், அரசியல் இலாபங்களுக்காக செயற்படுபவர்களை கட்சியில் இணைத்துக்கொள்ள நாம் தயாரில்லை. கொள்கைகளுடன் கட்சியில் இணைய விரும்புபவர்களையே இணைத்துக் கொள்வோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மிதக்கும் வாக்குகள் இம்முறை எமது கட்சிக்கே கிடைக்கும். வரவிருக்கும் மே தினத்தில் பலர் எமது கூட்டணியின் மேடையில் ஏற உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-7,10)

## வடக்கு மாகாண...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தாமே ஜனாதிபதி வேட்பாளர் என வலுக்கட்டாயமாக ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

ஆனால் பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக இதுவரை தெரிவு செய்யவில்லை. தென்பகுதி மக்களையும் வடபகுதி மக்களையும் ஏமாற்றிய வரலாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. எனவே வடக்கு மக்களை இனியும் அவரால் ஏமாற்ற முடியாது.

ஐக்கிய தேசியக்கட்சியினால் வெறும் ஒன்றரை இலட்சம் வாக்குகளை மாத்திரமே பெறமுடியும். எனவே இவை அனைத்தும் ஏமாற்று செயற்பாடாகும். மக்களின் நிராகரிப்புக்குள்ளான இவர்களின் அரசியல் பயணத்திற்கு மக்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்" இவ்வாறு சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (ம-7,10)

## குடும்பஸ்தர்...

யாழ்.இளவாலை பகுதியில், குடும்பஸ்தர் ஒருவர் குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர்களை விட்டு பிரிந்த நிலையில் இளவாலை வசந்தபுரம் பகுதியில் உள்ள காணியில் குடிசை ஒன்றை அமைத்து தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவரது குடிசைக்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்து குறித்த குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புதிய கொலனி, கீரிமலை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ஐயங்கன் சிவானந்தராஜா எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## சுற்றுலா...

தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் சமீபத்திய புள்ளிவிபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வந்துள்ள மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 608,475 ஆக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி 01 முதல் மார்ச் 27 வரையிலான காலகட்டத்தில், இந்த நாட்டிற்கு வந்துள்ள இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 92,644 ஆகவும், ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 88,301 ஆகவும் உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## வெளிநோயாளர்...

அறிவித்து கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வெளிநோயாளர் பிரிவில் அதிகளவில் சிகிச்சை பெறுவதற்கு வருகிறார்கள்.

அதன் காரணமாக வெளிநோயாளர் பிரிவை போயா தவிர்ந்த கிழமை நாட்களில் மாலை 6 மணி வரை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு இட வசதி மற்றும் ஆளணி எமக்குள்ள ஒரு பாரிய சவாலாக விளங்குகிறது.

இருந்தபோதும் எம்மிடம் காணப்படுகின்ற வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி சேவையாற்றி வருகிறோம்.

எமது தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துரைத்துள்ளோம். அவர் எமது தேவைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்திற்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தா வைத்தியசாலை கணக்காளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-7,10,33)

## இணை...

செயற்படக்கூடிய ஒருவரே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்கள் ஆணையுடனேயே ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். நாடு தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கக்கூடிய சிறந்த அரசியல் அனுபவம் கொண்ட சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்படக்கூடிய ஒருவரே இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவேண்டும்.

இந்த நாட்டுமக்களின் அமோக ஆதரவுடனேயே ஜனாதிபதி தெரிவு செய்யப்படவேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக எமது தனிப்பட்ட தீர்மானத்தினால் எதனையும் செய்ய முடியாது. மக்கள் அதனை தீர்மானிப்பர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7,10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.03.29
சீட்டிழுப்பு இலக்கம் 5434
Q 5 9 2 8 6 7
அத சம்பத
Q 2 8 6 7
சீட்டிழுப்பு இலக்கம் 0009
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1464
Q 49 56 57 61 Q
Double Chance 41767

மெகா பவர்
திகதி 29/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1782
V 09 21 49 65 67
Double Chance 96246

லக்கி 7 VIP
திகதி 2024.03.29
சீட்டிழுப்பு இலக்கம் 0260
L 6 1 0 9 9 2 L

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3676
சீட்டிழுப்பு திகதி 29.03.2024
U 39 43 55 79
U
50622
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.29
சீட்டிழுப்பு இலக்கம் 0743
கடகம் 35 51 53 56 கடகம்
04344 06

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
29.03.2024 வெற்றி வாரம் 142 வெள்ளி
Y 9 2 2 2 5 6
66041 R
அடுத்த சுப்பர் ஜக்பொட 32,160,836.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
2408 29.03.2024 வெள்ளி
25 49 61 71 W
53709
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,004,687.20

சனிதா Shanida
2024.03.29 வெற்றி வாரம் 4569 செம்மஞ்சள்
02 05 20 68 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,587,546.80

சசிரி SASIRI
460 2024.03.29
05 29 41
பச்சை 09
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,119,640/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4120 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.29 தினம் வெள்ளிக்கிழமை
08 13 29 42 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 15,355,680.40
490716

கப்ருக
L 07 22 44 52 58
1584 107337
அடுத்த சுப்பர் ஜக்பொட 514,782,779.40
29.03.2024 வெள்ளி

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2234
சீட்டிழுப்பு திகதி: 2024.03.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 102,787,715.20
24 35 39 76 E
555994


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
**SOLA CHEMICAL COMPANY (PVT) LTD**

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1185~~ | 900 |

விசேட விலைக் கழிவு (298)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433
288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

ரஞ்சனாஸ் (Ranjanas) நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரத்திலான தரை மற்றும் சுவர் ஓடுகள் (Tiles) இப்பொழுது எம்மிடம். கண்கவர் வண்ணங்களிலும், கவர்ச்சிகரமான விலையிலும் அத்துடன் அனைத்து வகை குளியலறை சாதனங்களும் பொருத்துகளுடன் பெயின்ட் (Paint) வகைகளையும் எம்மிடம் வாங்கலாம். பழைய இருப்புகளுக்கு 50% விலைக் கழிவும் வழங்கப்படும்.

**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**



(282)

## ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் காணி விற்பனைக்கு உண்டு. சாவகச்சேரி நகர் கண்டி வீதியில் 190, ஏற்றத்தடியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 615 6958**
**076 430 1811**

(C-0031)

## KBK கந்தர்மடம் | கொழும்புத்துறை

**கணக்கீடு** பிரத்தியேக வகுப்பு A/L 2024, A/L 2025

புதிய பிரிவுகள் ஆரம்பம்
தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்

தொடர்புகளுக்கு: 077 452 0043 (Whatsapp)

திரு.க.பா.பாலகஜன் SLTS
B.Com(Jaf), H.N.Dip-in-Acc, Dip-in-Edu, M.Com(Hons) Acc.Spl
(278)

## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு (விலை குறைக்கப்பட்டது)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 5 கோடியே 25 இலட்சம்
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:
+447963743585 (Whatsapp)
021 222 7141 (Sri Lanka)
Email : jamesraj_uk@yahoo.co.lk
(225)

## Canada and Italy Visa

Canada, Italy, UK, USA, Work visa, Visitor visa, students visa business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584
(301)

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686
076 424 7111

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.
(293)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS** (C-0029)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மாவிட்டபுரம்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு அண்மையாக பலாலி வீதியிலிருந்து 150m தூரத்தில் வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 450 m
2. நொதேன் வைத்தியசாலை 350m
3. நல்லூர் கோயில் 1200 m

- மொத்தமாகவும் அல்லது பிரித்தும் கொடுக்கப்படும்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (295)
உரிமையாளர்
075 776 7777
076 625 5277


## நினைவகலா
## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்
## வேலுப்பிள்ளை அன்பழகன்
(இளம் தளிர்க் கல்வியாளன்)

எண்ணமும் சொல்லும் செயலும்
ஏற்றிடும் தீபம் ஒக்கும்
வண்ணமாய் அழகு மேனி
வார்த்திடு அன்பு சேர்த்தே
கண்ணியக் குழம்பு என்னும்
காவியப் பெயரில் வாழ்ந்து
மண்ணில் இளம் சிறார்க்கு
மருந்தென அறிவை யூட்டி

பண்ணிய வாழ்வில் கரும்பாய்
பாசத்தைப் பொழிந்த தென்றல்
கண்ணினில் நிலையாய் நின்ற
கற்பனைக் கெட்டாத் தோன்றல்
விண்ணிடை விரவி மூன்று
ஆண்டுகள் நிறைந்த போதும்
கண்ணிடை மணியா யுள்ளே
கணம் தொறும் வாழும் சோதி.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(294)

இல. 42/6, சிவகுருநாதர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள், உறவுகள்


## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (276)
**074 17 37 684**

## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0029)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 265 /= | Max 3Kg |
| 1 Kg றவை | - | 288 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 187 /= | |
| 1 Kg சம்பா | - | 230 /= | Max 5Kg |
| 1 Kg தீட்டல்பச்சை | - | 165 /= | |
| 1 Kg அரிசி மா | - | 200 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 288 /= | |
| 10 Kg விஜிதா நாடு | - | 1940 /= | |
| 450g நெஸ்டமோல்ட் | - | 780 /= | |
| 01 Lux, lifeboy சவர்க்காரம் | - | 145 /= | ~~160/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - | 1455 /= | ~~1550/=~~ |
| 70g Baby Soap | - | 115 /= | ~~145/=~~ |
| 750g சுபோஷ மா | - | 550 /= | ~~590/=~~ |
| 180ml Chick சம்போ | - | 390 /= | ~~460/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - | 54 /= | ~~80/=~~ |

1045/=

~~1110/=~~

425/=

~~830/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(302)
Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org